அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 258

தாபனப் பிரிவு,
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
. 27 . . . ஜூன், 1984.

அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவருக்கும்.

**1983 ஜூலை மாதத்தில் நிகழ்ந்த கலவரங்களினால் தமது வீடுகளை இழந்து இன்றுவரை வீடில்லாமல் இருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள் பற்றிய விபரங்கள்.**

1983 ஜூலை மாதத்தில் நிகழ்ந்த கலவரங்களின் விளைவாகத் தாம் குடியிருந்த வீடுகளை இழந்து இன்றுவரை குடியிருக்க வீடில்லாமல் இருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள் பற்றிய விபரங்களை பெற்றுக் கொள்ளுதல் அவசியம். ஆகவே தயைகூர்ந்து அத்தகைய ஒவ்வொரு உத்தியோகத்தர் பற்றியும் கீழ்க்காணும் தகவல்களைப் பெற்று உங்கள் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களை வெவ்வேறாகக் குறித்து முழு அமைச்சுக்கும் ஒரு பட்டியலாக அமையும்படி தயாரித்து 31-ஜூலை 1984 ஆம் திகதிக்கு முன் எனக்கு அனுப்புக.

(I) உத்தியோகத்தரின் பெயரும் பதவிப் பெயரும்
(II) 1983 ஜூலை கலவரங்கள் நடந்தபொழுது உத்தியோகத்தர் கடமையாற்றிய அலுவலக முகவரி
(III) அப்பொழுது அவர் குடியிருந்த இடத்தின் முகவரி
(IV) குடியிருந்த வீடு தமது சொந்த வீடு/வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுத்த வீடு/அரசாங்க வீடு/ வாடகைக் கொள்வனவு மூலம் பெற்ற வீடு என்பது பற்றிய விபரம்.

ஒப்பம்: டி.பி.ஜ.பீ.எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.